குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 24-2-59 செவ்வாய் | இசை: 38

வடநாட்டில் பெரியார் முழக்கம்

வெற்றிக் கும்மி

கும்மி அடியுங்கள் பெண்களே – நல்ல
செந்தமிழ் நாட்டின் கண்களே,
நம்மிடம் உண்டு வடக்கை வீழ்த்தும்
நல்ல நல்லதமிழ்ப் பண்களே
(கும்மி)

தொடங்கும் போர்பு கன்றிடவே - தம்
சொற்போர் கொண்டு வென்றிடவே
நடந்தார் பகை நாடு நோக்கி
நம்பெரியார் அருள் தேக்கி
(கும்மி)

மக்கள் உயிர்க்குயிர் விடுதலை – அதை
மறந்து வாழ்தல் கெடுதலை
இக்கதை சொன்னபெ ரியார் காண்க
எங்கும் புகழப் படுதலை
(கும்மி)

நேருந மக்குப்ப கையாளி – அவன்
ஊரிற் புகுந்தநம் காப்பாளி
சீரும் சிறப்பும் அடைந்ததை நோக்கினுல்
நேருவென்பான் ஒரு கோமாளி
(கும்மி)

குடியரசுக்கட்சி என்ப தொன்றும் – முசிலீம்
கூட்ட மென்றுசொல்லும் மற்ருென்றும்
ஒடிந்த உள்ளத்து மக்கள் தொகுதியும்
ஒப்பினர் நம்தமிழ் அப்பர் கொள்கை.
(கும்மி)

ஐதார பாத்து நாகபுரி – கான்பூர்
இலக்கு மணபுரி வாழுமக்கள்
கை தூக்கிவர வேற்றனர் தந்தையார்
காட்டிய நன்னெறி கைப்பிடித்தார்
(கும்மி)

நூற்றுக்கு மூன்று பார்ப்பனர் ஆள
நோக்கிப் பெரும்பான்மை யோர் மாள
ஆற்றிடும் இவ்வாட்சி காற்றிற் பறக்கட்டும்!
அறமுழக்கினர் நம் பெரியார்!
(கும்மி)

பவுத்தம் ஒப்பும்பெ ரியாரே - அந்தப்
பவுத்தம் வன்செயல் ஒப்பவில்லை
பவுத்தம் ஒப்பாத வன்செயலை–நீர்
பற்றுவ தேன்என்று கேட்டாராம்
(தொடர் கடைசிப்பக்கம்)
(கும்மி)

புதுச்சேரி, தி. வ, ஆ ௧௯௯௦ மாசி ௧௨.

என்ன நடந்தது?

ஆகாஷ் வாணியை எதிர்த்து உண்ணு நோன்பு கிடந்த திரு, அரங்கரத்தினம் நேற்று வரைக்கும் ௨௧ நாட்களைத் தள்ளிவிட்டார்.

இது ஆட்சியாளருக்குப் பெரிய தோர் அச்சத்தை உண்டு பண்ணியதில் வியப்பில்லை. இந்த உண்ணுநோன்புச் செய்தியில் மிகுதி யாய்த் தலையிட்டுக் கருத்தை வெளியிட்டு மக்களின் மனக்கசப்பைத் தேடிக்கொண்டவர் சென்னை அமைச்சர் திரு, பக்தவச்சலனுரே

அரங்கரத்தினத்தின் உயிர் போய்விட்டால் தமக்குத்தான் மக்களால் தொல்லை ஏற்படும் என்று பெரிதும் அஞ்சிக்கிடந்தவர் பத்தவச்சல னுராகத்தான் இருக்கவேண்டும்.

௨௧-ம் நாளாகிய 19-2-59ல் தமிழ்நாட்டுத் தலைவர்கள் அரங்கரத்தினத்தைக்கண்டு "இந்தப் போராட்டம் வெற்றி பெற்றுவிட்டது ஆகவே உண்ணுநோன்பை நிறுத்திவிடுங்கள்" என்று கேட்டுக் கொண்டதாகத் தினத்தந்தி செப்பு கின்றது.

இவ்வாறு கேட்டுக்கொண்ட தமிழ் நாட்டுத்தலைவர்கள் இன்னின்னுர் என்பதையும் ஆதித்தனுர் தினத்தந்தி சொல்லியுள்ளது.

அவர்கள்தாம். நாம்தமிழர் இயக்கத்தலைவர் சி. பா. ஆதித்தனுர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரான க. அன்பழகன் நாம் தமிழர் இயக்கச் செயலாளர் சி. அ. வரத ராசன் மற்றும் பல கட்சிக்காரர்கள்.

தமிழ்நாட்டின் தலைவர்களைப் பார்த்தீர்களா? நினைவில் வைத்துக்கொள்ளுவது கடினம். ஒரு தாளில் குறித்துவைத்துக் கொள்ளுங்கள் தலைவர்களின் பெயர்ப் பட்டியல் பெரிய தாயிருப்பதால்!

இந்த இரண்டு மூன்று ஆட்கள் மட்டுமா இந்த அரும்பணி செய்ய முன்வரவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம், வேறு என்ன செய்யச் சொல்லுகிறீர்கள். பத்தவச்சலனுருக் குக் கிடைத்த கையாட்கள் இவ்வளவு மட்டுமே. இந்தக் கீழ்த்தரச் செயலுக்கு எல் லாரும் ஒப்புக் கொள்ளுவார்களா? உள்ளம் ஒப்புக்கொண்டாலும் வெளிப்படையாக வெளியில் வர ஒப்புக்கொள்வார்களா?

வானெலி என்ற தொடரையும் ஆகாஷ் வாணிகூட வைத்துக் கொள்ளுங்கள் என்று தில்லியிருந்து சேதி வந்ததாக அமைச்சர் சில நாட்களின் முன்னமே சொல்லியதை அரங்கரத் தினமும் இந்த ஆதித்தனுரும் பிறரும் ஒப்ப மறுத்தார்கள் என்பது அனைவர்க்கும் நினை விருக்கும். இன்றைக்கு அதையே தமிழ் நாட் டின் மாபெருந் தலைவர்கள் வெற்றி என்று சொல்லியதன் காரணம் என்ன? தமிழ் மானத்தை வடவனுக்குக் காட்டிக் கொடுப் பதும் பத்தவச்சலனுர்க்கு அரங்கரத்தினத்தைக் கூட்டிக்கொடுப்பதுந்தானே.

இதில் படிப்போர்க்கு ஓர் ஐயப்பாடு தோன்றலாம்: இந்தப் 'புண்ணியச் செயலில் அன்பழகனும், ஆதித்தனுரும்மட்டும் தலை யிட்டதென்ன என்று.

அன்பழகனுர் பத்தவச்சலனுரின் கையாள னுர். இல்லையா? ஆதித்தனுர் கிடைத்தது எப்படி என்று கேட்கின்றீர்கள்.

தி. மு. க. ஆள் பிடிப்பிக்கு அன்பழகனுர் ஆதித்தனுரின் புதுத்தொடுப்பு.

ஒழிக தமிழ்!

வாழ்க வஞ்சநெஞ்சங்கள்!!

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி 1௧.

இடம்: *சோழநாட்டு அரண்மனை.*

காலம் : *காலை.*

உறுப்பினர் : *கோப்பெருஞ் சோழன், புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார், மற்றும்புலவர்கள் துணைப்படைத் தலைவன், ஒற்றர் ஆட்கள். சோழ மன்னி.*

காட்சித் தலைப்பு:

செயல் இல்லை.

நிகழ்ச்சி : *கோப்பெருஞ் சோழன் அவைக் களத்தில் ஒற்றன் பேருரை!- அவன் விரைந்து அவையினுள் புகுந்தான்.*

ஒற்றன் : வணக்கம்! செயலில்லை. திறலூர்ப் பொதுவிடுதியை நம் படை சூழ்ந்து கொண்டது! உள் நுழைந்தது. இளவரசரைக் கண்டது. படைத் தலைவரைக்கண்டது செயலற்று நின்றது.

சோழன்- விலங்கிட்டு இழுத்துவர வேண்டியதுதானே!

ஒற்றன் : விலங்கா! படைத் தலைவருக்கா! இளவரசருக்கா?

சோழன் : உன் கேள்வியே இப்படியா?

ஒற்றன் :. நானல்ல. நம் படையினர் சொன்னது.

சோழன் சரி பிறகு? நின்றார் நின்றபடி தானா!

ஒற்றன்- பொறுத்தருளுக. கூறுகின்றேன். செயலற்று நின்ற நம் படையினரை நோக்கி எங்கு வந்தீர்கள் என்று கேட்டார் படைத் தலைவர்! உங்களைச சிறைப்படுத்தக் கட்டளை இட்டார் மன்னர் என்றனர், நம் படையினர்.

அரசர்தாம் பொருது கூறினாலும் நீங்களும் அதற்கு ஒத்துக்கொள்ளலாமா என்றார் படைத் தலைவர். அதனால்தான் சும்மா நிற்கின்றோம் என்றார்கள் நம் படையினர்.

சோழன்- எனவே இவர்களும் அவர்களோடு! அப்படித்தானே?

ஒற்றன்- ஆம்!

சோழன்- இனி அனைவரும் சேர்ந்து என் முடியைப் பறிக்கவேண்டும். அப்படித்தானா?

சிரிப்பு வருகின்றது. பிறகு?

ஒற்றன்- உங்கள் மகனாரின் படை துணைக்கு வந்து சேர்ந்தது.

சோழன்- விரைவில் சொல்லிமுடி.

ஒற்றன்- இளவரசர் அந்தத் துணைப்படைத் தலைவனை நோக்கி, இவர்களைச் சிறைப்படுத்துங்கள் என்றார். அதற்கு அந்தத்துணைப்படைத் தலைவர் "இவர்கள் நம் பகைவர்அல்லரே என்று கூறிச் சும்மா நின்றனர். அதன்பிறகு நம் படை மற்றொன்று வந்தது அங்கே: அதுவும் செயலற்று நின்றது. நிலைமை இதுதான்.

(இதே நேரத்தில் சோழ மன்னியும் அங்கு வந்துவிடுகின்றாள்.)

சோழன்- என் தோள் எனக்குத் துணை; என் ஒருவாள் எனக்குத் துணை - *(வாளை உருவுகின்றான்)*

பெற்றவள் பிள்ளைகளை இழக்கட்டும். என் நாடு, தான்பெற்ற இன்னலை இழக்கட்டும். என் ஆட்சி தன் பெரும்படையை இழக்கட்டும் என் பெரும்படையினர் தம் தலைகளை இழக்கட்டும். *(எழுகின்றாள் சோழ மன்னி, சோழ மன்னனின் காலைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விடுகின்றாள்.)*

மன்னி: பெருந்தவங்கிடந்து பெற்றபிள்ளைகளல்லவா அத்தான்! நீங்கள் போகவேண்டாம் நானே சென்று நல்லது சொல்லித் திருத்துகின்றேன்; அவர்கள் திருந்துவார்கள்.

சோழன்- தாயரும் சேயர் கட்சி! என்னைக் கொன்று என்முடி பறிக்க இருக்கும் பிள்ளைகளின் கட்சிதான் என் அன்பு மனைவியும்!

உனக்கு உன் மக்கள்மேல் அன்பு தோன்றலாம். இயற்கைதான். ஆனால் நிலைமை வேறு. உன் அன்பைக் காட்டு அழு! கண்ணீரால் நனை இதோ கொண்டுவருகின்றேன் இரண்டு தலைகளையும்

(போக முயல்கின்றான் புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார் இடை மறிக்கின்றார்)

எயிற்- பொறுத்தருள வேண்டும் எனக்குப் பட்டதை இயம்புகின்றேன். கேட்டருள வேண்டும்.

பாட்டு

மண்டமர் உற்ற மதன்உடை நோன்தாள்
வெண்குடை விளக்கும் விறல் கெழுவேந்தே,
பொங்குநீர் உடுத்தஇம் மலர்தலை யுலகத்து
நின்தலை வந்த இருவரை நினைப்பின்
தொன்றுறை துப்பின்நின் பகைஞரும் அல்லர்.
அமர்வெங் காட்சியொடு மாறுஎதிர்பு எழுந்தவர்
நினையுங்காலை நீயும் மற்றவர்க்கு
அனையை அல்லை. அடுமான் தோன்றல்
பரந்துபடு நல்லிசை எய்தி மற்றுநீ
உயர்ந்தோர் உலகம் எய்திப் பின்னும்
ஒழித்த தாயம் அவர்க்கு உரித்தன்றே?
அதனால், அன்னதாதலும் அறிவோய் நன்றும்
இன்னும் கேண்மதி இசைவெய் யோயே
நின்ற துப்பொடு நின்குறித் தெழுந்த
எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கு எஞ்சுவையே?
அமர்வெஞ் செல்வம் நீஅவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழிஎஞ் சுவையே
அதனால் ஒழிகதில் அத்தைநின் மறனேவல்
[விரைந்து
எழுமதி வாழ்கநின் உள்ளம் அழிந்தோர்க்கு
ஏமம் ஆகும்நின் தாள்நிழல் மயங்காது
செய்தல் வேண்டுமால் நன்றே வானோர்
அரும்பெறல் உலகத்து ஆன்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே!

சோழன்- *(எண்ணத்தில் ஆழ்ந்தவனாக)* ஆம்! *(வாளை உறையில் போட்டு இருக்கையில் அமர்கின்றான்)* இனி என் நிலை என்ன? இருக்க வேண்டுமா இவ்வுலகில் நான்! *(அரண்மனையின் அமைப்பையும், வேலைப்பாட்டின் அருமையையும் நோக்கியபடி எழுந்துசெல்லுகிறான். மன்னி முதலிய அனைவரும் உடன் தொடர்கின்றார்கள்)* தூய்மை கெடாமல் இருக்க அரண்மனையை நாடோறும் துடைத்து வரவேண்டும், வாய்மை கெடாதிருக்க, ஆளுவோன் மனமானது மாசு கொள்ளாதிருக்க வேண்டும்.

(மற்றொருபுறம் போகின்றான் மன்னன். உடன் செல்லுகின்றனர் மற்றவர்களும்)

அறமன்றம்

அரசன் என்பவன் அறிவிற் சிறந்தாரை மதிக்கவேண்டும். பெருங்குடிமக்களைச் சிறிதும் இகழ்தல் கூடாது. நான் மக்களையா பெற்றேன், நரிகளைப்பெற்றேன். எனக்குப் பின்?

நூல் மன்றம்

பண்டைத் தமிழ்ச் சான்றோர் அருளிய சட்ட நூற்கள், தமிழ்ப் பெரும் புலவர் தந்த ஒழுக்க நூற்கள். தமிழிலக்கியம் இலக்கண நூற்கள். உயிர் என மதிக்கப்படுதல் வேண்டுமே! என் கண்ணே, *(மன்னியை)* மறந்துவிடாதே! புலவர் பெருமானே! அறிவு தந்து உதவினீர் எனக்கு! அதுபோலவே என் வழிவருவோர்க்கும் உதவவேண்டும்.

மன்னி- ஏன் இவைகள்! நீங்கள் எங்கே போகின்றீர்கள் அத்தான். அதோ பாருங்கள் உணவுண்ண அழைப்போர் உங்கள்முகநோக்கி நிற்கின்றார்கள்.

சோழன்- அதுதான் முடியாது. அதுமட்டுமல்ல. என் தடக்கைகள், இனிச் செங்கோல் தாங்காது. இவ்வுடல் வடக்கிருந்து உயிர்விடும்.

(அனைவரும் அழுது துடிக்கின்றார்கள்.)

ஆகாஷ்வாணி ஒழியட்டும்!

கயல்விழி.

போரெனக் கேட்ட தாய் - புதுமழலைச் செல்வத்தை-புத்தொளியை-பொன்னேட்டை அருகிழுத்தாளாம். அணைத்தெடுத்தாளாம். குஞ்சி திருத்தினுளாம். கூர் வேலைக் கையில் கொடுத்து கொற்றவன் சென்ற களம் நோக்கு என்ருளாம்.

இந்தப் பழம் வரலாற்றை பக்கம் பக்கமாக எழுதிப்பத்திரிகைக்கு அனுப்புகின்ருயே புத்தக மாகப் பிரசுரிக்கின்ருயே. புது மணம் வீசும் ரோஜா மலர் கழுத்திலசைய மேடையில் நின்று வாய் கிழியப் பேசுகின்ருயே. அதைப் பற்றிப் பேச, எண்ண, எழுத உனக்கு என்ன தகுதி இருக்கிறதென்று கேட்கிறேன்.

தண்டமிழ் மொழி விளங்கும் தமிழ்த் தரணி யில் ஒலிக்கும் வானொலியில் ஆகாஷ்வாணியாம் அதை அனந்த சயனம் அய்யங்கார் முதல் அக்ர காரத்துக் கடைசிச் சிறுவன்வரை சிந்தைமகிழக் கேட்டு உன்னை ஏளனப் பார்வையுடன் நோக்குகிருன்.

ஆச்சாரியாரை ஆச்சாரியனுகப் பெற்ற கல்கி ஏடு, இந்தி தமிழகத்தில் நுழையக்கூடாது திணிக்கப்படக் கூடாது என்ற கல்கி ஏடு, ஆகாஷ்வாணி ஒழிக்கப்படவேண்டும் என்று ஒரு தலையங்கம் எழுதிற்ரு?

காலத்துக்கேற்ற கோலம் கொள்ளும் ஆனந்த விகடனுக்கு, இருபத்தைந்து நாட் களுக்குமேல் ஒரு தமிழன் உண்ணு நோன்பு இருந்து உயிர் மாய்க்க இருப்பதைக் கண்ட பிறகாவது 'ஆகாஷ்வாணி ஒழியட்டும்' என ஒரு தலையங்கம் தீட்ட வேண்டுமே என்ற எண்ணமாவது உண்டாயிற்ரு ?

அகில உலகத்துச் செய்திகளை அப்படியே முன் பக்கத்தில் பிரசுரிக்கும் 'இந்து' ஏடு உள் நாட்டில் ஆகாஷ்வாணிக்கு இருக்கும் எதிர்ப்பைப் பற்றித் தன் இதழின் எங்காவது ஒரு மூலையில் எடுத்தியம்பியுள்ளதா ?

அதை அடியொட்டிச் செல்லும் மெயில் இந்தியன் எக்ஸ்பிரஸ், சுயசாதி மித்திரன் ஆகிய இவைகள் தலையங்கம் எழுதி தமிழைக் காத்து நன்றிக் கடனைத் தெரிவிக்காவிடினும் செய்தி களை இருட்டடிப்புச் செய்யாமல் இருந்தனவா? எனவேதான் கூறினேன் - அக்ரகாரக் கும்பல் ஆகாஷ்வாணியைக் கேட்டு மகிழ்கிறது என்று.

கங்கைகொண்ட சோழன் என் மரபென்று ஏறுநடை போட்டுப் பேசும் புத்திளைஞனே! அந்தக் கங்கையிலே நீராடி, காலமெல்லாம் வேதம் ஓதி வயிறு வளர்க்கும் வழிவந்த நேரு வின் ஆட்சி, உன் தோழனை - தமிழனை - உயிர் தமிழுக்கு; உடல் மண்ணுக்கு என்னும் உத்தமனை - அரங்கரத்தினத்தைப் பலி கேட்கிறது!

செங்குட்டுவனின் வழிவந்த வீர பரம்பரை என்று விண்ணதிர முழங்கும் உன் வாய்வீரம் அரங்கரத்தினத்தைக் கண்டு ஆமைபோல் அடங்கும்படியா கூறிற்று?

ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ் செழியன் - பாரெல்லாம் புகழ்ந்தேத்தும் வீரம் கொண்டோன்-அவன் வழிவந்த வீரப்பரம்பரை என்று கூறும் உன் வாய்ப்பேச்சு அரங்க ரத்தினத்தின் உண்ணு நோன்பைக் கண்டு பொட்டுப் பூச்சியாய்; புன்மைத் தேரையாய் கல்லாய், மரமாய், உயிரற்ற பிண்டமாய் இருக்கும்படியா கூறிற்று?

நம் நண்பன் - தோழன் - தமிழ் மானங் காக்கும் தீந்தமிழ்த் தூயவனது உடலை மண்ணில்மூடி மறைக்கத்தான் உன் உள்ளம் ஒருப்படுகிறதா?

ஐயகோ ! தாயின் துயர்துடைக்க முன் வந்தவனை தோள் கொடுத்துக் காக்க - துணைவர நாதியில்லை. தூ தூ தமிழா. உன் நிலை இந்த அள வுக்குத் தாழ்ந்து ஒடுங்கி நிற்க வேண்டுமா?

தமிழ்த் திருமண்ணிற் பிறந்து, தவழ்ந்து விளையாடிய தோழனே - நீ எந்தக் கட்சியைச் சார்ந்தவனுகவும் இருந்து தொலைந்து போ. ஆயின் தமிழன் என்ற அந்த இனஉணர்ச்சியை மட்டும் மறந்துவிடாதே. உன் வீட்டுவானெலிப் பெட்டியில் ஒலிக்கும் ஆகாஷ்வாணி குளிர் தமிழாய் - தேனுய் - பாகாய் ஒலிக்கிறதா?

செந்தமிழ்த் திருமண்ணில் மனிதன் என்று பிறந்து சொந்தமாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறனை இழந்து, கட்சிஎன்ற தேனில் ஒட்டிக் கிடக்கும் தமிழனே - அண்மையில் நிற்கும் ஆந்திராவின் செயலை சென்ற சில ஆண்டுகட்கு முன் கண்டாயல்லவா? பொட்டி ராமுலு நாயுடு வின் இறுதி எட்டி நின்ற நேருவை கட்டியிழுத் துக் கொணர்ந்து தனி மாநிலம் அமைக்க வழி யொன்றைக் காட்டவில்லையா ?

தமிழ் இளைஞனே - மயிலே மயிலே இறகு போடு என்ருல் போடுமா? மாம்பழமே மரத்தை விட்டு மெல்ல இறங்கி என் வாயருகில் வர மாட்டாயா ? என்று கேட்பதால் வந்துவிடுமா? இறகு வேண்டுமெனில் மயிலைப் பிடித்து இறகைப் பிடுங்கவேண்டும். கனி வேண்டு மாயின் கல்கொண்டு தாக்கவேண்டும்.

அந்தோ! எண்ணவும் மனம் துணுக்குறு கின்றதே. அன்று விருதைத் தமிழனின் உடலை மண்ணுக்குள் மூடி மறைத்து முக்காடிட்டு நிற்பதுபோல இன்று அரங்கரத்தினத்தின் உயிரை ஆறடிக் குழியில் கிடத்திப் பார்க்க முடிவு செய்து விட்டாயா ?

ஐயகோ! தமிழனே இதைக்கேள். மனிதருள் நீயுமோர் மனிதன். மண்ணன்று இமைதிற. எழுந்து நன்ருய் எண்ணுவாய். தோளை உயர்த்து. சுடர்முகம் தூக்கு. மீசையை முறுக்கி மேலே ஏற்று. இந்த வாசகங்கள் உன் உடம்பு நாடி நரம்புகளில் ஏறி உன்னுள் ஒரு வீரக் கிளர்ச்சியை - கம்பீர சன்னி நோயை உண்டு பண்ணட்டும். ஆண்மை அற்றிலேன் பெண்மை உற்றிலேன் என்னும் எண்ணம் மூண்டெழுந்து முகடுதட்டி நிற்கட்டும். இந்த உள்ளக் கிளர்ச்சியுடனும் உடல் துடிப்புட னும் ஓடு. மாத்தமிழ் வீரன் அரங்கரத்தினத்தின் உயிரைக் குடிக்க இருக்கும் டில்லிக்கு உன்னை யார் என்பதைக் காட்டிவிடு. கணநேரமும் தாமதிக்காதே. ம்...ம். தொடங்கு உன் வேலையை. தொடர்ந்து நடக்கட்டும் - ஆகாஷ் வாணி ஒழியட்டும் !

கீழ்க்கண்ட ஊர்களுக்கு விற்பனையாளர்கள் தேவை

மதுரை	நெய்வேலி
பண்ணுருட்டி	திண்டிவனம்
விருத்தாசலம்	விழுப்புரம்
செங்கல்பட்டு	தாம்பரம்

விவரங்கட்கு :—

அமைச்சர்,
'குயிலகம்' புதுச்சேரி.

மணிப்பொறி

புதுவை, வித்துவான் பா. முத்து

பரிதியின் மறைவு தோற்றம்
பன்மலர் சேவற் கோழி
விரிகதிர்த் திங்கள் விண்மீன்
விளக்கத்தைக் கொண்டே மக்கள்
அரிதினில் அறிந்தார் கால
அளவினை; இன்றோ உன்றன்
திருஉரு முட்கள் நன்கு
திட்டமாய் உணர்த்தும் காலம்,

காலையர் கையில் வேய்த்தோள்
கன்னியர் வளைக ளோடு
நீளுயர் சுவரில் நிற்பாய்!
நெட்டுயர் கோபு ரத்தில்
ஆளிருந்(து) அறைவ தொப்ப
அரற்றுவாய் மணிஒ லித்தே;
நாளினை நகர்த்தல் உன்றன்
நற்கரு முட்கள் அன்றோ?

ஒலிகேட்டே இயங்கும் வான
ஊர்திகள் கலங்கள் யாவும்;
ஒலிகேட்டே ஊதும் ஆலைச்
சங்குகள்; முழங்கும் உன்றன்
ஒலிகேட்டே ஊக்கம் கொள்வர்
ஒண்டொடி மகளிர்: நல்ல
பொலிமணிப் பொறியே! எண்ணப்
பூம்பொழில் மலரே! வாழி!

காலத்தில் இராகு காலம்
காண்கின்றார் மக்கள்; அந்தக்
காலத்தில் எதையும் செய்யக்
கருதிடார்; மக்கட் கெல்லாக்
காலமும் உணர்த்தும் நீயக்
காலத்தைக் காண்ப தில்லை;
ஞாலத்து மாந்தர்க் கிந்த
உண்மையை நவின்றி டாயோ?

பொன்னோக்கும் காலம் என்றே
புகலுவார் அறிவின் மிக்கார்:
அன்னவர் சொல்லைக் காக்க
அரியதோர் துணைவன் நீயே!
என்னவென் றெண்ணி டாமல்
இராப்பகல் எனப்பார்க் காமல்
உன்னலம் சிறிதும் பேணா(து)
உழைக்கின்றாய் பிறருக் காக!

வஞ்சியின் மடலைக் கண்டேன்
வளங்கண்டேன் மனத்தில் "மாலை
அஞ்சரை மணிக்கு வாரீர்
அன்பரே!" என்றி ருந்த
செஞ்சுவைத் தமிழைக் கண்டேன்,
திகழ்பொறி உன்னைக் கண்டு
கெஞ்சினேன்; விரைக என்றேன்
கேளேன்யான் எனஅ சைந்தாய்!

கொஞ்சிடும் கிளியை ஒத்த
கோதையாள் தன்னைக் காண
மிஞ்சிடும் ஆவல்; மெத்த
மெலிந்திடும் உடலோ டுள்ளம்
"தஞ்சம்!நீ விரைவாய்! சற்றுத்
தகுவேளை உணர்த்தாய்" என்றேன்
வெஞ்சுரக் காதல் வேட்கை
பொறியேநீ! உணராய் போலும்!

இயங்குவாய்! மக்கள் தம்மை
இயக்குவாய்! பொறியே எந்தத்
தயக்கமும் உன்பால் இல்லை;
தகுகடன் ஆற்று கின்றாய்;
செயத்தகு வேளை இஃதே
செய்யென ஒலிப்பாய்! உன்றன்
பயன்பெறும் மக்கள் வாழ்வின்
பயன்பெறும் மக்கள் என்பேன்.

∞★∞

அழித்திடு முற்றும்...!

மன்னம்பாடி, பி. பாலகிருட்டினன்

எடுப்பு

ஒழித்திட நம்மை நினைப்பவர் தம்மை
அழித்திடு முற்றும்! பயப்பட வேண்டாம்!

உடனெடுப்பு

புழுத்திடும் புண்ணை பூச்சிஅ ரிக்கும்
பூசும ருந்தால் உயிரைக்கு டிக்கும்
(ஒழித்திட)

அடிகள்

நச்சுறும் அந்த ஆரியச் சின்னம்
நலிந்திட வேண்டும் முயன்றிடு முன்னம்
முத்தமிழ்ச் சங்கம் முன்போல்வி ளங்கும்
முதன்மையு னக்கே உலகம்வ ழங்கும்!
(ஒழித்திட)

செந்தமிழ் நாட்டுப் பெரியவர் இன்று
செப்புதல் கேட்டே ஒப்புதல் நன்று!
வஞ்சகர்க் கிங்கு வால்குழைக் காதே
வளர்த்திரு நாட்டை வாய்ப்புள்ள போதே!
(ஒழித்திட)

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

நாகம்

இது வடமொழியல்லவா?- இவ்வாறு தனி முறையில் கேட்கின்றார் ஓர் வடமொழி அன்பர். அதே நேரத்தில் அவர் தனிமுறையில் கேட்கின்றேன் தனிமுறையில் பதில் எழுதுங்கள். குயில்வாயிலாய்ப் பதில் தருவதாயிருந்தால் என் பெயரைக் குறிக்க வேண்டாம் என்றும் கூறுகின்றார். இவ்வளவு கட்டுப்பாடுகளை நமக்கு ஏற்படுத்துகின்றார்! காரணம் நண்பரின் தலைக் கொழுப்பேயாகும்.

நகு என்றதன் அடியாகத் தோன்றியது நாகம்: நகுதல் என்பதற்கு மகிழ்ச்சி, ஒளி சிறப்பு என்பன பொருளாகும்:

நகு என்பதன் அடியாகப் பிறந்த நாகம் என்றது சொல்லுக்கு நாளடைவில் விண், குரங்கு, புன்னை, தூசு, மலை, பாம்பு, யானை என்பன அனைத்தும் பொருளாயின.

ஏன்? - இங்குக் கூறிய விண் முதலிய அனைத்தும் மகிழ்ச்சியையும் ஒளியையும் சிறப்பையும் தரத்தக்கன ஆதலால்,

நகு முதல் நீண்டு நாகு என்றாயது இலக்கணப்படி! நாகு என்பது அம் சாரியை பெற்றது இலக்கணப்படியே.

வடமொழி இலக்கியத்தில் நாகம் வருகின்றதே என்று கேட்பர் சில அறிவிலிகள். வந்தாலென்ன! தமிழ்ச் சொல்லைத் திருடாதவர்களா வடவர்? வடமொழி இலக்கியம் என்பதாக - தனித்தன்மையோடு - கலப்பில்லாமல் ஒன்று வாழ்கின்றதோ வடவருக்கு?

நாகம் தூய தமிழ்க் காரணப்பெயர் என்பதை மீண்டும் வலியுறுத்தினோம்.

எழுதுவார்க்கு வேண்டுகோள்

குயிலுக்குக் கட்டுரையோ, பாட்டோ எழுதுகின்றவர், அதனோடு, தம் முகவரி முதலியவை எழுத வேண்டும், அன்றியும், குயிலுக்குரிய தம் சந்தா எண், அல்லது குயில் விற்பனையாளரிடமிருந்து, குயில் வாங்குவதைக் காட்டும் நற்சான்று, குறித்தனுப்பக் கோருகின்றோம்.

– ஆசிரியர்

எதுவரினும் அஞ்சோம்!

சேத்தியாதோப்பு, அ. முருகு

மறத்தமிழர் வீரமிங்குச் சாய்ந்திடுமோ? – தமிழ்
மறக்குலத்து முழக்கம்தான் ஓய்ந்திடுமோ?
தீந்தமிழ்ச் சோலையை அழித்திட எண்ணில் – அஃது
தீயுடன் விளையாட்டே; தீய்ந்திடுவீர் மண்ணில்,
வடக்கினை வளமாக்கும் வஞ்சக எண்ணம் – பகை
வளர்த்திடும் என்றே உரைத்திட்டோம் முன்னம்;
எண்ணித் துணிந்தோமினி எதுவரினும் அஞ்சோம் [– மண்ணில்
எந்தாய்த் திருநாட்டை இன்னுயிராய்க் காப்போம்.
பறைகொட்டிப் பாருக்கோர் விண்ணப்பம் சொல் [வோம் – வெம்
பகைவீழ்த்தப்படையுண்டு, திடமுண்டு வெல்வோம்!
முறையிட்டால் பயனில்லை; மூவேந்தர் படையே [களம்
முழக்கிட்டால் தடையில்லை விடுதலையைப் [பெறுவோம்
வானத்து மின்னல்நிகர் வாள்வலியைக் கொண்டே [– இந்த
வையத்தார் நடுங்குவண்ணம் போர்புரிவோ ரின்றே
வைத்தகுறி தப்பாது! வடவர்துள்ள வேண்டாம் [–விரைந்து
வரும்போரில் விடுதலையைத் தடுப்போர் இங்கேது?

நம்ப வேண்டாம்

கருப்பட்டிப்பாளையம், பொய்யாமொழி

பார்ப்பானை எதிர்த்து வாழ்ந்தோர்
பாரிலே இல்லை என்றும்,
பார்ப்பானைப் பகைத்தால், தெய்வப்
பழிவந்து சேரும் என்றும்,
பார்ப்பான்தான் கடவுள், தீண்டாப்
பறையனே அடிமை என்றும்
பார்ப்பானே நம்மை ஏய்த்துப்
பாரினில் உயர்ந்து விட்டான்.

திரிகின்ற பூனூல் பார்ப்பான்
செய்திடும் வஞ்ச கத்தை
அறியாத மக்கட் கோடி
அரும்பணி புரியும் அண்ணல்
நரிக்குண வடவர் நாவை
நறுக்கிடும் அறிவுத் தந்தை
பெரியாரே சொல்லு கின்றார்
பார்ப்பானை நம்ப வேண்டாம்.

நாட்டினில் துடித்துச் சாகும்
நாமெல்லாம் கடவுள் பெற்ற
கூட்டான குழந்தை என்றால்
கொண்டதை மறைத்து வாழ
வீட்டிற்குப் பூட்டேன் தற்கு?
வெம்பசி கொல்லும் நோயேன்?
வாட்டிடும் பிணியைப் போக்கக்
கடவுளை நம்ப வேண்டாம்.

கடவுளை மனத்தால் எண்ணின்
கடும்பசி தீரு மன்றோ?
கடவுளின் சிலையைச் சுற்றக்
'கரு'வுண்டாம் என்று சொன்னால்
கடவுளிற் சிறந்த கொண்கன்
கன்னியர் தேடல் ஏனோ?
கடவுளின் உருவைத் தாங்கும்
கருங்கல்லை நம்ப வேண்டாம்.

நாரிலா மனத்தைப் பெற்ற
நயவஞ்ச கப்பார்ப் பான்தான்
கூரிய கவைநாக் கொண்ட
கொடுநாகப் பாம்பை ஒப்பான்;
ஓரினம் மக்கள் என்னும்
உயர்வினை மாற்றி, அந்த
ஆரியன் வகுத்து வைத்த
சாதியை நம்ப வேண்டாம்.

நீயின்றேல்...

கோவை, அ. மாரிமுத்து

அருவி இணைந்தால் ஆற்றிலே – அந்த
ஆறும் கடலில் இணைந்திடும்,
மருவிச் சோலை மலர்களைக் – காற்றும்
மணக்க வீசிக் களித்திடும்.

பொங்கும் இயற்கைப் படைப்பிலே – காதல்
பொங்கி யாவும் மகிழ்ந்திடும்,
எங்கும் இனிமைப் பாட்டடி – நாமும்
இணைந்தால் என்ன குற்றமோ?

அலைகள் மோதும் கடல்தனை – அந்த
அழகு நிலவு தழுவிடும்,
மலைகள் வான முகட்டிலே – முத்த
மாரி பொழிதல் காணடி.

அலைகள் அணைத்துக் குதித்திடும் – சோலை
அல்லி மலர்கள் வண்டிடம்
கலைகள் பேசும் காதலால் – இன்பக்
கன்னி நம்மில் பிரிவுஏன்?

மண்ணைத் தழுவும் கதிரவன் – தனிமை
மண்ணில் எங்கும் இல்லையே
என்னை அணைக்க நீயின்றேல் – நான்
இன்பம் காணேன் இவற்றிலே !

இக்கவிதை ஆங்கிலக்கவி "ஷெல்லி" யின் "அன்பின் தத்துவம்" எனும்ஆங்கிலக் கவிதையின் தழுவல்.

கடன் ஒளி

சென்னை, வீ. சுப்பிரமணியம், எம். ஏ.

ஞானத்தின் ஒளிவாய்ந்தோர் அமுதச் சொல்போல்
நலந்திகழும் தண்ணொளியால் உலகோர் போற்ற
வானத்தில் மிளிர்கின்றாய் நிலவே இன்ப
வையத்தே காதலர்க்கு விருந்து மானாய்
மானத்தைக் காப்பாற்றக் கடனும் பட்டு
மணந்திட்டுப் புலம்புகின்ற வறிஞர் போன்று
தானத்தை யளிக்கின்ற கதிரோன் தந்த
தயவாலே கடனொளியை அடைந்தா யன்றோ !

பெருமழைப் புலவரின் உரைநயம்

தகட்டூர், மா. இராமலிங்கம்.

'நல்ல குறுந்தொகை என்றுபோற்றப்படும் குறுந்தொகை சங்கம் மருவிய எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகும். நம் பண்டைத் தமிழ் மக்கள் தாய் மொழியாகிய தமிழினை முச்சங்கத்திருத்தி முதன்மையுற வளர்த்தனர் என்பதும், கடல்கோள் சிலவான் அவர்தம் மொழிச்சிறப்பும், வழிச்சிறப்பும் முட்டின்றி அறியவொண்ணாது ஆழ்கடலகத்தே அமிழ்ந்தன என்பதும், அவற்றுட் சிலவே நமக்குக் கிடைத்தன என்பதும் யாவரும் அறிந்த ஒன்றே. தாலப்புல்லின் வால்வெண் தோட்டிலேயே எழுதப் பட்டுத் தேடுவார் அற்றுக் கிடந்த இக்குறுந்தொகையை முதற்கண் அச்சேற்றி உரைகண்டவர் திரு. சாமிநாதையர் ஆவர். இஞ்ஞான்று தமிழ்ப் பெருந்தகையாரான பெருமழைப் புலவர், பொ. வே. சோமசுந்தரனாரின் உரை புலவர்கள் பலராலும் விழுமியதெனப் போற்றப்பட்டு வருகிறது. இவ்விருபேர் அறிஞர்களின் உரையையும் ஒப்பிட்டுப் பயிலுங்கால், பெருமழைப் புலவர்கண்ட உரை, நயம் பயப்பதாயும், வளம் கெழுமியதாயும் உள்ளது பொள்ளெனப் புலனாக நிற்கின்றது.

நடுநின்று, குறை நிறைகாணும் செப்பமுடைய எந்தத் திறனாய்வாளனும் இம்முடிவுக்கே வர வேண்டி உள்ளது. எடுத்துக்காட்டு ஒன்றைக் கொண்டு இக்கொள்கையை நிறுவுவோம்.

'காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாய தோழி, அறத்தொடு நின்று, அவனே பரிகரிப்பனென்று கருதிய தனைத் தலைமகளும் நயப்பாளாகக் கூறியது? என்ற அடிக்குறிப்புடன்,

மழைசேர்ந் தெழுதரு மாரிக் குன்றத்து
அருவி யார்ந்த தண்ணறுங் காந்தள்
முகையவிழ்ந் தான நாறும் நறுநுதல்
பல்இதழ் மழைக்கண் மாஅ யோயே
ஒல்வை ஆயினும் கொல்வை ஆயினும்
நீயளந் தறிவைநின் புரைமை வாய்போற்
பொய்மொழி கூறலஃ தெவனோ
நெஞ்ச நன்றே நின்வயி னானே.

என்ற இப்பாடல் குறுந்தொகையின்கண் 259-வது பாடலாக அமைந்துள்ளது.

அஃதாவது, தலைவியின் நாற்றம், தோற்றம் முதலியன கண்டு ஐயுற்ற தாய் ஊரார் கூறும் அலருக்கு அஞ்சி தலைவியை இற்செறித்தாள். காவல் மிகுதியையும், கவலைப்படும் தலைவியின் நிலையையும் கண்டு கவன்ற இருளை தலைவியின் களவொழுக்கத்தைச்செவிலிக்கு அறிவித்துஅறத்தொடு நின்ற செய்தியைத் தோழி தலைவிக்குக் கூறுவதாக உள்ளது. இப்பாடல்,

"மேகங்கள் சேர்ந்து எழுந்த மழையை உடைய மலையினிடத்துள்ள, அருவிக்கு அருகிற் பொருந்திய, தண்ணிய நறிய காந்தளரும்புகள் விரிந்து அமையாதனவாய் மணம் வீசுகின்ற நறிய நெற்றியையும், பல இதழையுடைய தாமரைப் பூவைப் போன்ற குளிர்ச்சியை உடைய கண்ணையும், உடைய மாமை நிறம் பொருந்தியோய்! நீஎன் பிழையைப்பொறுப்பாய் ஆயினும், அன்றிச் சினந்து கொல்வாய் ஆயினும் நின் உயர்வை நீயே அளவிட்டு அறியும் ஆற்றலை உடைய மெய்யைப்போல பொய் வார்த்தைகளைக் கூறுதலாகிய அது என்ன பயனைத் தரும்? நின் திறத்து தலைவனுடைய நெஞ்சம் நலமுடையது".

இதுவே சாமிநாதையர் கூறும் உரையாகும்.

"முகில்கள் தங்கி எழாநின்ற கார்காலத்து மலையினின்றும் வீழும் அருவி நீரைப் பருகிய தண்ணியநறிய காந்தளினது அரும்புகள் மலர்ந்து அமையாதனவாய் மணங்கமழா நின்ற நறிய நுதலினையும் பலவாகிய இதழ்களை உடைய தாமரைப் பூப்போன்ற குளிர்ந்த கண்களையும் மாமை நிறத்தையும் உடையவளே! நீயான்செய்த செயலை நன்றென்று கருதி உடன்படுவாய் ஆயினும் நீயே நினது உயர்வினை அளவிட்டறியும் தகுதியுடையை ஆகலின், நீ விரும்பியதனைச் செய்வாயாக. இச்செயலுக்குக் காரணமான என் நெஞ்சம் நின்பால் நன்மையே உடைத்து. மேலும் யான் இங்ஙனம் செய்யாவழிப் பொய்கூறவே நேருமாகலின் அப்பொய்மொழியை மெய்ம்மொழி போலக் கூறுதலால் யாதுபயன் உடைத்தாம்?"

இது பெருமழைப் புலவர் கண்ட பொருள், இருப்பினும், இவ்வுரையே நயம் மிக்கது. எவ்வாறெனின், இப்பாடலில் பொதிந்து கிடக்கும் உள்ளுறையை எடுத்துக் காட்டியதாலேயாகும். இதை சாமிநாதையர் குறிப்பிடாது அமைந்ததற்குக்

தமிழா! எழு!! விழி!!!

குடந்தை. கோ. நாகராசன்

நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. நிலைமை வலுத்துக் கொண்டிருக்கிறது. தலைவர் தந்தை பெரியார் அவர்கள் மூலைமுடுக்குகள் எல்லாம் கழகக் கொள்கைகளை கட்டிளங் காளைகளுக்கு அள்ளிவழங்கி அன்புமாரி சொரிந்து நாளை நடக்க இருக்கும் நல்ல தீர்ப்புக்கு அடிகோலி வருகிறார் –ஒருபுறம்.

மக்கள் இல்லாமைக்கும், இழிநிலைக்கும், வறுமைக்கும், வாட்டத்திற்கும், சோர்வுக்கும், சோம்பேறித்தனத்திற்கும், அடிமைக்கும் அனுட்டானங்களுக்கும் வாழ்வுக்கும், தாழ்விற்கும் காரணம் 'விதி' 'ஆண்டவன் விட்ட வழி' என்று வேதாந்தம்பேசி காலத்தை வீணாக்கிக் கயமைக்கும் பெருமைக்கும் இடங்கொடுத்து இன்னல் இழைத்து வரும் அறிவிலிகள் மலிந்த சுடுகாடாகிவிட்டதே இன்றைய தமிழ்நாடு என்று இடர் படுகிறார் மறுபுறம்.

தாயை அன்பின் உருவமாகவும் தந்தையை வீரத்தின் விளைநிலமாகவும் கருதுதல் தமிழ்வழக்கு. அந்த முறையில் தமிழ்நாட்டைத் தாய்நாடு என்று எண்ணுந்தோறும் இன்பம்பிறக்கும், துன்பம் விலகும். அத்திருநாடு தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வமும் பெற்ற பெருநாடு. அந்நாட்டின் தலைசிறந்த தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் வீணர்களை விரட்ட வீரர் ஈ. வெ. ரா. தலைமை தாங்கத் தயார் என்பதை எண்ணும்போது வீரம் பீறிட்டெழுகிறது, விவேகம் முன்னணியில் நிற்கிறது. நாமெல்லாம் அந்த ஈரோட்டுவள்ளலின் வாழ்நாளிலே வாழ்கிறோம் என்பதை நினைந்து அகமகிழ்கிறோம். இகம பரம் இரண்டையும் பெற்றவர் ஆகிறோம்.

செல்வத்திலும், செயலிலும், அறிவிலும், ஆற்றலிலும் தன்னேரிலாத தமிழ்நாடு வடவர் ஆதிக்கத்தினின்று விடுபட்டாக வேண்டும் என்றும் அல்லும் பகலும் அயராது உழைக்கிறார். தென்னாதமிழ்ப் புலவராம் குறட்பாக்களை அள்ளித்தந்த வள்ளுவரை இன்னும் தமிழ்நாடு தக்கமுறையில் பாராட்டவில்லை அருந்தமிழ்ச் செல்வமே, பெரும் பொருட்செல்வத்திலும் விழுமியதென்று ஓர்ந்து இளமையிலேயே துறவுபூண்டு சிலம்பு செய்த செந்தமிழ்ச் செல்வம் முத்தமிழ் வித்தகனை முறையோடு உபசரித்தோம் இல்லை. முக்கண்ணன் முன் நின்று மொழியும் கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்த சொற்போர் வீரன். நற்றமிழ்க் கலைஞன் நாவன்மையைப் போற்ற மறந்தோம்.

அறியாமையால் செய்த பிழைகளை மறந்து நடக்க இருக்கும் நல்ல செய்கைகளை நெஞ்சில் இருத்தி நடமாடும் அறிவுத் தெய்வம் முத்தமிழ் நாட்டின் முறைபோகிய வித்தகர்களில் சிறந்த உத்தமர் ஈ. வெ. ரா. கூறும் சொல்லெல்லாம் பொற் செல்வம், எழுத்தெல்லாம் பொற் பாடல் அவர் குன்றிலிட்ட விளக்கு – அலைபாயும் கடல் – சீறிஎழும் சிங்கம் – அறிவுலக சிற்பி – நீதி தவறா நெறியாளர் – குணக்குன்று – தள்ளாத வயதில் கையில் தடியூன்றி பொல்லாத சாதிஎனும் பூதத்தை மண்ணோடுமண்ணாக்கக் களம்நோக்கிசென்று பயன் கண்ட பாவலன். அப்பாவலன் வழிநின்று அவர் சொல்கேட்டு அவர்க்குப்பணிசெய்வதே நம்மவரின் கடமை. தமிழர்கள் வாழவேண்டும். தனிநாடு காணவேண்டும். டெல்லி ஏகாதிபத்தியத்தினின்றும் தனித்தியங்கவேண்டும். புலிக்கொடி பறக்க வேண்டும். புவியோர் நம்மைப் புகழவேண்டும். புன்மை அகலவேண்டும். நன்மை பிறக்கவேண்டும் அதற்கானவை இன்றே செய்யவேண்டும். தமிழா நீ வீறுகொண்டுஎழு. விவேகமற்றவர்களை நம்பாதே உன்வாழ்வு ஆரியனுக்கு அடிபணியக் கூடாதென்றால் விழித்துக்கொள்! அதோ காத்துக்கொண்டிருக்கிறது. உன் வாழ்விலே பொன்னான வாய்ப்பு உன்னையும் அவர்களில் ஒருவனாகப் பதிவு செய்து கொள்ளத் தயாராய் இரு.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

என்ற செந்நாப்போதார் உரைத்துச் சென்றதை உள்ளம் உணரவில்லையா? களம் நோக்கி ஓடு, பகைவரைசாடு, வீழ்ப்பட்டால் வேதனைப்படாதே பலன் கிடைத்தால் பரணி பாடலாம். இல்லையேல்

மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

என்ற குறளின் குறிக்கோளுக்கு இலக்காகி உயிர் நீப்போம்.

வெண்பா வினு விடை

வினு. முதலிரண்டு அடிகள். விடை. ஈற்றிரண்டடிகள்.

வினு: க. இராமசாமி, பள்ளிப்பட்டி. விடை: சித்தன்

திரைப்படம் பார்ப்பதனுல் செந்தமிழர் பண்பு
பெருகிடுமா குன்றிடுமா பேசு – திரைப்படத்தால்,
பெற்ருர்நற் கல்வி பிறநாட்டார்; நந்தமிழர்
உற்ருர்கே டென்றே உணர்!

வினு: க. இராமசாமி, பள்ளிப்பட்டி, விடை: பா. மு.

காதல் மணம்சிறக்கக் காண்போமோ? பஞ்சாங்கம்
ஓதும் மணம்ஓங்க உய்வோமா? – தீதிலாக்
காதல் மணமே மணமென்க; மற்ருென்ருே
ஏதிலார் தந்த இழுக்கு.

வினு: தஞ்சை எழிலன், சென்னை. விடை: சித்தன்

தெள்ளுதமிழ்ச் சொல்லுழவன் வள்ளுவனின் சீர்க்குறளை
உள்ளுதொறும் நெஞ்சம் உவப்பதேன் – விள்ளக்கேள்;
'உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்(டு)என்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு'

வினு: இரா. சுந்தரம், ஓமலூர். விடை: பா. மு.

செந்தமிழ்ப் பாவியற்றிச் சிந்தை மகிழ்வெய்த
எந்தவழி யுண்டென் றியம்பிடுக – சுந்தரமே!
ஊன்றிப் படிப்பாய் உயர்தமிழை உள்ளத்தே
தோன்றும்பார் தூய கவி.

வினு: முத்து, பத்மனுபன், சென்னை. விடை: சித்தன்

சீரற்ற கீழ்நிலையால் செந்தமிழர் நன்னுடு
வேரற்ற மாமரம்போல் வீழ்ந்ததேன – சீரற்ருர்,
நம்பிப் புகுந்தார்,இந் நாட்டில்; அவர்கொள்கை
நம்பியதால் கெட்டதிந் நாடு!

வினு: ம. க. அன்பெழிலன், மதுரை. விடை: பா. மு.

தீங்கு செயுமிந்தித் தாள்பணிந்தே இன்றமிழை
நீங்கி யகல்வோர் நிலைகூருய்! – பாங்காய்
இனிய உளவாக இன்னுத கொள்வோர்
கனியிருக்கக் காய்கவரு வோர்.

முடிநட்டான் ஏகம்பவாணன்

- திருச்சி. இளங்கீரன் -

ஏகம்பவாணன் என்பான் சோழநாட்டில் உள்ள ஆறை என்ற ஊரில் சுமார் ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்து வந்த ஒரு செல்வந்தன். அவன் வேளாளர் மரபினன். பேரரசருக்கும் ஒப்பான பெருஞ்செல்வத்தைக் கொண்டவன்.

இவன் செல்வத்தைக் கொண்டு செருக்கோடு வாழ்ந்தானிலன். கொடையிலும், கல்வியிலும், வீரத்திலும் சிறந்திருந்தான். இவனது மனைவியும் இலக்கண, இலக்கியங்களை முறையே பயின்று தமிழில் புலமைப் பெற்றவள்.

ஏகம்பவாணன் வைகறையிலே துயில் எழுவான்; எழுந்ததும் வயல் வெளிகளைச் சுற்றிப் பார்க்கச் செல்வான்; இது அவனது தினசரி வழக்கம் ஆகும்.

வழக்கம்போல் ஏகம்பவாணன் ஒருநாள் வயல் களைச் சுற்றிப் பார்க்கப் போயிருந்தான். அவ்வாறு அவன் ஒருநாள் போயிருக்கும்போது முடிமன்னர் மூவரும் அவனைக் காண அவனது மாளிகைக்கு வந் தனர். ஏவலர்கள் தங்கள் தலைவன், வயலுக்குச் சென்றிருப்பதாகவும். அவசரமாகப் பார்க்க விரும் பினால் ஆள் அனுப்பி அழைத்து வருவதாகவும் கூறினார்கள். அதுகேட்டு, அரசருள் ஒருவர், முடி நடப்போனாரோ! குலத்தொழில் அல்லவா அது என்று கூறி நகைத்தார். உடனே மற்றவர்களும் கல கல என்று நகைத்தனர்.

ஏகம்பவாணனின் இல்லக்கிழத்திக்கு இந்த சேதி எட்டியது. அந்த சொல் தனது கணவனை அவமதிப்பதாகத் தெரிந்தது. ''முடிநடப்போனாரோ என்று கேட்கிறார்கள். ஆம், என் கணவர் முடி நடத்தான் போனார். என்ன முடி தெரியுமா? மூவேந்தர்களின் முடி. ஆம், போர்க்களமாகிய வயலில் மூவேந்தர்களின் சேனைகளை வெட்டித் தழையாக இட்டு, அவற்றின் உடலினின்று பெருகும் குருதியாகிய நீரைத் தேங்கப் பாய்ச்சி, தான் ஏறிச் செலுத்தும் யானையின் காலால் மிதிப் பித்தச் சேற்றில் மூவேந்தரின் முடியை ஏகம்ப வாணன் பறித்து நட்டான் என்று சினம் பொங்கக் கூறினாள்.

''சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த அடிச்சேற்றில் - மானபரன்
மாவேந்தன் ஏகம்பவாணன் பறித்து நட்டான்
மூவேந்தர் தங்கள் முடி''

திரண்டு வாரீர்!

காரை ப. நெடுமாறன்

முங்கைமொழி இந்திவந்தால் அறிவு மாயும்
முத்தமிழும் செத்தொழியும் அறிவீர் நன்றே
தீங்கனியாம் செந்தமிழை இந்தி ஆளத்
துணைசெய்தார் கெடுமதியார் நீதி என்றார்
வேங்கைக்குச் சிறுநரிதான் வேந்தன் என்றால்
முறையாமோ இக்கூற்று நீதி தானோ?
தூங்காதீர் தமிழர்களே! விழித்துக் கொள்வீர்
தமிழ்காக்கத் தோள்கொட்டித் திரண்டு வாரீர்!

எப்பக்கம் வந்துவிடும் இந்தி இங்கே?
எத்தகைய படைகொணரும் பார்ப்போம் என்றேம்
தப்பான வழியினிலே இந்தி இன்று
தென்னாட்டில் பரவுதைப் பிணியைப் போல
உப்பிட்டுச் சோறுண்ணும் தமிழ்நாட் டாரே
உணர்விலையோ பிறமொழிக்கா ஆக்கம் செய்வீர்
தப்பாமல் இந்தியினை வடக்கே ஓட்டித்
தாய்மொழியைக் காப்பதற்குத் திரண்டு வாரீர்!

அடிமைதனை வேரோடு பிடுங்கித் தள்ளி
அஞ்சாமல் தமிழன்தன் நாட்டை மீட்கக்
கடுகளவின் உழைப்பேனும் நல்கான் என்றால்
கெட்டழிவான் துரோகியவன் தமிழன் அல்லன்
கெடுதலைக்கோ தமிழர்களே பழிசு மப்பீர்
கொடுமையிது தெரிந்துகொள்வீர் பழியைப் போக்க
விடுதலைப்போர்ப் படையினிலே பங்கு கொள்வீர்
வீரமுடன் நாடுபெறத் திரண்டு வாரீர்!

போர்க்களத்தில் வெற்றிகளைத் தமதே ஆக்கிப்
பூரித்தார் மறத்தமிழர் பெருமை கொண்டார்
பார்கண்ட தமிழினத்தின் மறத்தை இன்றே
பழிக்கின்றார் தமிழர்களே தயக்கம் ஏனோ
போர்என்றால் தினவெடுக்கும் தோள்கள் எங்கே
புலியொத்த மறமெங்கே ஆண்மை எங்கே
ஆர்வமுடன் போர்புரிந்தே இனத்தைக் காக்க
ஆர்ப்பரித்தே அணியணியாய்த் திரண்டு வாரீர்?

10-ஆம் பக்கத்தொடர்ச்சி

பெருமழைப்புலவரின்....

காரணம் 'அருவியார்ந்த' என்ற சொற்றொடருக்கு ''அருவிக்கு அருகிற் பொருந்திய'' என்று தவருகப் பொருள் கூறியதேயாகும்.

ஆனல், பெருமழைப் புலவர் 'அருவியார்ந்த' என்பதற்கு 'அருவி நீரைப்பருகிய' என்று பொருள் கொண்டார். 'ஆர்ந்த' என்ற சொல்லுக்குப் பருகிய என்னும் பொருள் உண்ட என்பது,

"துய்த்தலருந்தல் - ஆர்தறுவ்வுதல், துற்ற னுகர்தல், மாந்தலயிறல், உண்டறின்றல்-பருகுதலி வையுனும், பண்பிற்றெழிலைப் ப க ரு ம் கி ள வி'' என்னும் திவாகர நூற்பாவால் பெறப்படும்.

சாமிநாதையர் அருவிக்கு அருகிற் பொருந்திய என்று கொண்டு 'அருவி ஆர்ந்த' என் ப த ற் கு ஒப்புமைப் பகுதியாக,

நீரயற் கலித்த நெரிமுகைக் காந்தன்
(பரிபாடல் 14, 13.)

உயர்முகை நறுங்காந்த ளுடோறும் புதிதீன
அயனந்தி யணிபெற அருவியார்ந் திழிதரும்
பயமழை தலைஇய பாடுசால் விறல்வெற்ப
(கலி 53, 5, 7.)

என்பனவற்றையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இவரது உரை ஒருவாற்ருன் சரியே ஆயினும், இப்பாடலைப் பாடிய பெரும் பு ல வ ர் பரணருக்கு மாசு கற்பிப்பதாயும், இவரது புலமைக் குறைவை ஒருங்கே எடுத்துக் காட்டுவதாயும், அமைந்துள்ளது நோக்கற்பாலது.

கார்ப்பருவத்தே குளிர்ந்த மலையினது அருவி யைப் பருகிக் கா ந் த ள் முகையவிழ்ந்து ஆறு நாறும் என்றது 'யான் அறத்தொடு நின்றதனல் நம்மிலையைச் செவிலி, உட்கொண்டு நற்ருய் முதலி யோர்க்கு உணர்த்துவாள், அதனல் த ம ர் வரைவு ம லி ந் து திருமணம் நிகழும் என்ற குறிப்பான் உணர்த்தியவாறு'' என்பது பெருமழைப் புலவரின் கூற்று.

மேலும்,''மழைசேர்ந்து எழுதரும் மாரிக்குன்றம், தோழியாலே உண்மையறிந்து கொண்ட செவிலி அக்குன்றத்து அருவி அறத்தொடு நிற்றல் அவ்வரு வியைப் பருகிய கா ந் த ள் தலைவியின் தமர், அக் காந்தள் முகையவிழ்ந்து ஆறு நாறுதல் தமர் காவல் கைவிட்டு உறவுடம்பட்டுக் கரணம் நிகழ்த்துதல்'' என்று ஒப்புமை கூறி உள்ளுறையைப் பெருமழைப் புலவர் வெளியிடும் திறம் அறிந்து மகிழற்பாலது.

இங்ஙனம் நுண்ணிதில் உள்ளுறை காணுவழி ஏற்படும் குறை என்னையோவெனில்,

மழைசேர்ந் தெழுதரும் மாரிக் குன்றத்
தருவியார்ந்த தண்ணறும் காந்தள்

என்னும் இவ்விரண்டடிகளும் பொருட் சிறப்பு இன்றிக் கொன்னே நின்றுவிடும் என் ப தா ம். அப்படியானல் இது மிகப் பெரிய குற்றமன்றே? குன்றக் கூறல், கூறியது கூறல் என்னும் குற்றங் களில் வெற்றெனத்தொடுத்தலும் குற்றமேயன்றே? எனவே, பரணரால் திட்டப்பட்ட இவ்விரண்டடி களும் அக்குற்றத்திற்கு ஆளாக்கத்தான் வேண்டும். நல்லிசைப்புலவராகிய பரணருக்கு இங்ஙனம் மாசு கற்பித்தல் அறிவுடைமையாகுமா?

எனவே, தவறு நல்லிசைப் புலவர் பரணரி டத்தும் அல்ல, அவரது பாட்டிற்கு உரைகண்ட பெருமழைப் புலவரிடத்தும் அல்ல தவருக உரை கண்டு உண்மைப் பொருள் காணுது சென்ற சாமிநாதையரிடத்ததே என்பது பெறப்படும்.

பெருமழைப் புலவரின் விழுமிய உரையே சிறந்ததாம் என்று கண்டு தெளிக.

மயங்காதீர் பிறமொழியுள் வளர்க்கின்ருரே.

—திருச்சி முதுகண்ணன்—

நான்தமிழன் என்மொழிதான் தமிழே யென்ற
நற்பண்பை மறவாதீர்! நாட்டி லுள்ளீர்!
ஊன்தமிழே உயிர்தமிழே உணர்வு முற்றும்
ஒள்ளியதிந் தமிழென்றே உறுதி கொள்வீர்!
தேன்தமிழின் செம்மையினைக் கெடுப்பா ராயின்
தேய்த்திடுவீர்! துடித்தெழுந்து சேமஞ் செய்வீர்
வான்தமிழிற் புறப்பேச்சான் மயக்கு கின்ருர்
மயங்காதீர் பிறமொழியுள் வளர்க்கின்ருரே.

தமிழ்நாட்டில் தமிழர்தலை தூக்க வேண்டின்
சாய்ந்ததமிழ் மீண்டெழுந்து தளிர்க்க வேண்டின்
தமிழ்நாட்டிற் பழம்புதுமை காண வேண்டின்
தனையொழித்துப் பிறர்க்கடிமை தகர்க்க வேண்டின்
தமிழ்நாட்டில் தமிழ்மக்கட் குரிமை வேண்டின்
தன்மான முடையவராய் வாழ வேண்டின்
தமிழ்நாட்டில் வாழுகின்ற தமிழச் சேய்காள்
தமிழ்மொழியைப் போற்றிடுவீர்! பிறமற் றுண்டே!

மதிப்புரை

கிடைக்குமா திராவிடம்:- என்ற ஒரு சிறு நூல் நம் பார்வைக்கு அனுப்பப் பட்டது. அதை ஆக்கியோர் ஆசிரியர் க. வே. வேணுகோபாலன் அவர்கள்.

அந்நூலின் சுருக்கம் இது:-

அடைய முடியாது திராவிடம்: திராவிட நாட்டுப் பிரிவினை கோருபவர் திறமை யற்றவர். அதுபோலவே தமிழ்நாடு கேட்கும் பெரியாரும் செய்யத் தகுந்தவைகளைச் செய்யத் தவறியவரே. நாம் தமிழர் இயக்கத்தை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

இனிய நடை, பிழையற்ற சொற்றொடர் கொண்ட இச்சிறு நூலை எழுதிய திரு க. வே. வேணுகோபாலனா உள்ளத்தூடு நாம் செல்வோமானால் அங்கு ஆதித்தனாரைப் பார்க்க முடிகிறது. அவர் அதோ தம் முகமூடியைக் கிழித்துக் கொள்ளுகின்றார் பாருங்கள்.

தொடங்கி விட்டார் ஆதித்தனார் தம் சொந்த வேலையை. பன்முறை அம்முறையில் அவர் தோல்விகண்டார் எனினும் விட்டாரில்லை வீண் முயற்சியை.

தக்காரை அடுப்பது அவரையே கெடுத்து மேம்படுவது என்பது ஆதித்தனார் உள்ளம்! வெற்றி பெறுமா? முன்போல் மண்ணைக் கௌவுமா? பிறகு தெரியும்.

கிடைக்குமா திராவிடம் ஆசிரியர், மக்கட்கு விழிப்பூட்டியதற்காக அவர்க்கு நம் நன்றி யுரியது.

எல்லாரும் படிக்க வேண்டிய நூல் இது. ஆனால் கிடைக்குமிடம் தெரியவில்லை.

★○★

புரட்சி வேகம்

மதுரை சு. தமிழன்பன்

கமழ்கின்ற தமிழகத்தில் காத்து வந்த
கனிமொழியும் காற்றாகப் பறக்கு தையோ!
உமிழும்ஒளி ஞாலத்தில் உறையும் மக்கள்
ஒருபோதும் தாய்மொழியை ஒதுக்க மாட்டார்!
தமிழென்ற பேச்சில்தான் தளிர்த்த இன்பம்
தரைமட்ட மாயிற்றே! தமிழர் பெற்ற
அமிழ்தன்ன வானொலியை அகற்றி விட்டே
ஆகாச வாணியென்றே அலறு கின்றார்!

பொன்னான தாய்நாட்டைப் பிரித்தார்; நெஞ்சில்
பொங்கிவரும் துக்கத்தைப் பொறுத்தோம்: [எங்கள்
கண்ணான தமிழ்நாட்டை மாற்ற வில்லை;
கலங்காத கண்களிலே வடித்தோம் கண்ணீர்;
மண்ணாளும் மந்திரிகள் நம்மை யெல்லாம்
மானமில்லாத் தமிழரென்றே மதித்து விட்டார்;
பொன்னான உயிரொன்று போகு தங்கே!
புறப்படுவீர் வீரர்காள் புரட்சி காண!

விற்பனையாளர்க்கு....

இம்மாத முடிவிற்குள் பாக்கிப் பணம் அனுப்பாத விற்பனையாளர்கட்குக் குயில் அனுப்புவது நிறுத்தப்படும்.

அப்படி அனுப்பத்தவறுவோர் பெயரைக் குயிலில் வெளியிடுவதுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

—அமைச்சர்.

கட்டண விவரம்

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு.
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50,
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் பதினைந்துகாசு (0-15) அஞ்சல் தலைகள் அனுப்புக.

குயில்

Regd No. M. 7030

வடநாட்டில் பெரியார் முழக்கம்

(முதற்பக்கத் தொடர்)

இருண்ட நெஞ்சங்கள் இக்கேள்வி - தனை
எழுப்பி நிற்கவும், நம்பெரியார்
மருண்ட உலகம் உணர்வு பெற்றிட
வழங்கிய விடை கேளீரோ!
(கும்மி)

என்னுரை தன்னையே பின்பற்ற வேண்டும்
என்பதில்லை என்று புத்தர் சொன்னார்.
உன்னுடை அறிவிற் பட்டதைச் செய்கென
உரைத்த னர்அவர் கண்டீரோ?
(கும்மி)

எப்போது வன்முறை வேண்டுமோ நானதை
அப்போது மேற்கொள்ள வேதுணிந்தேன்
தப்பேது சொல்லுங்கள் என்று புகன்றனர்
தக்கோர் வியந்திட நம் பெரியார்
(கும்மி)

நேருவின் ஆட்சியின் வேரும் அதிர்ந்திட
நீண்டவை பற்பல சொற்பெருக் காம்
கோரிய கேள்விக்கு நல்ல நல்லவிடை
கொட்டி முழக்கினர் நம்பெரியார்
(கும்மி)

திக்கின்றி நேருவின் நீங்கில் நலிந்தவர்
தென்னாட்டு வேங்கையின் வன்மை கண்டார்
வெட்கினன் நேரு! வடக்கர் விலகினர்
வேண்டினர் நம்பெரி யார்துணையே
(கும்மி)

தில்லிக்குப் புறப் பட்டார் பின்னர்
செந்தமிழ் நாட்டு மா மன்னர்
தில்லித் தலைவர்கள் வந்துகுழுமினர்
நம் பெரியாரின் திருமுன்னர்
(கும்மி)

சாதியைக் காக்கஓர் சட்டமிட்டார் - அது
சட்டமா கட்டாயத் தூக்குமரம்! - என
மீதியும் சொல்லிய நம்பெரியார் நெறி
வெல்க என்றார்களாம் தில்லி மக்கள் !
(கும்மி)

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.